செ.வெ.எண்:11 நாள்:06.05.2017

## பத்திரிக்கைச் செய்தி

கரூர் மாவட்டத்தில் 2017-18 ஆம் ஆண்டிற்கான படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) கடன் திட்ட இலக்கீடு 115 நபர்கள் 57.50 இலட்சம் மானியம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உற்பத்தி தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சம் ,சேவைத் தொழில்களுக்கு ரூ.3.00 இலட்சம் மற்றும் வியாபாரத் தொழில்களுக்கு ரூ.1.00 இலட்சமும் கடன் வழங்க ஆணை பெறப்பட்டுள்ளது. 18 முதல் 45 வயதுக்குட்பட்ட குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பயனடைய , படித்த வேலைவாய்ப்பற்ற ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற பின்வரும் நாட்களில் வட்டார வாரியாக முற்பகல் 11.00 மணிக்கு தொழில் ஊக்குவிப்பு முகாமும் மற்றும் பிற்பகல் 2.00 மணிக்கு நேர்முகத் தேர்வும் நடத்தப்படவுள்ளது.

| வ.எண் | முகாம் நடைபெறும் வட்டாரம் மற்றும் இடம் | நாள் |
|---|---|---|
| 1. | அரவக்குறிச்சி–வட்டார வளர்ச்சி அலுவலகம் | 09.05.2017 |
| 2. | க.பரமத்தி –வட்டார வளர்ச்சி அலுவலகம் | 10.05.2017 |
| 3. | குளித்தலை–வட்டார வளர்ச்சி அலுவலகம் | 11.05.2017 |
| 4. | கரூர்–மாவட்ட தொழில் மைய அலுவலகம் , சத்திய மூர்த்தி நகர்,தாந்தோணிமலை,கரூர் | 12.05.2017 |
| 5. | கடவூர்–வட்டார வளர்ச்சி அலுவலகம் | 16.05.2017 |
| 6. | தோகைமலை–வட்டார வளர்ச்சி அலுவலகம் | 17.05.2017 |
| 7. | தாந்தோணி–வட்டார வளர்ச்சி அலுவலகம் | 18.05.2017 |
| 8. | கிருஷ்ணராயபுரம்–வட்டார வளர்ச்சி அலுவலகம் | 19.05.2017 |

மேற்கண்ட ஊக்குவிப்பு முகாம் மற்றும் நேர்முகத்தேர்வில் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.